

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, குமரி கோ-ஆப்டெக்ஸில் 30 சதவீதம் சிறப்பு தள்ளுபடி விற்பனையை, நாகர்கோவில், குமரி கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில், இன்று (16.09.2016) குத்துவிளக்கேற்றி வைத்து, முதல் விற்பனையை துவக்கி வைத்தார். கோ-ஆப்டெக்ஸ் மண்டல மேலாளர், திருநெல்வேலி (பொறுப்பு), திரு.க.இசக்கிமுத்து உடனுள்ளார்.

செ.வெ.எண்: 640/2016 நாள்: 16.09.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, குமரி கோ-ஆப்டெக்ஸில் 30 சதவீதம் சிறப்பு தள்ளுபடி விற்பனையை இன்று (16.09.2016) குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, குமரி கோ-ஆப்டெக்ஸில் 30 சதவீதம் சிறப்பு தள்ளுபடி விற்பனையை, நாகர்கோவில், மீனாட்சிபுரம் பேருந்து நிலையம், காமராஜ் கட்டிடத்தில் அமைந்துள்ள குமரி கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில், இன்று (16.09.2016) குத்துவிளக்கேற்றி, முதல் விற்பனையை, கன்னியாகுமரி மருத்துவ கல்லூரி மருத்துவமனை உறைவிட மருத்துவர் மரு. எம். மேரிவிஜயா அவர்களுக்கு வழங்கி, தெரிவித்ததாவது:-

இந்தியாவிலுள்ள கைத்தறி நிறுவனங்களிலேயே முதன்மை நிறுவனமாக கோ-ஆப்டெக்ஸ் திகழ்வதற்கு நெசவாளர்களின் ஒத்துழைப்பும், வாடிக்கையாளர்களின் பேராதரவும் தான் முக்கிய காரணங்களாகும்.

வாடிக்கையாளர்களின் பேராதரவினால் 2015-16-ஆம் ஆண்டில், ரூ.314.00 கோடி அளவிற்கு கோ-ஆப்டெக்ஸ் சில்லறை விற்பனை செய்து, வரலாற்றுச் சாதனை புரிந்துள்ளது. கோ-ஆப்டெக்ஸ் எடுத்து வரும் பல்வேறு முயற்சிகளின் பலனாகவும், வாடிக்கையாளர்களின் ஏகோபித்த பேராதரவினாலும், கோ-ஆப்டெக்ஸின் 82 ஆண்டுகால வரலாற்றில் இந்த சாதனை விற்பனை நிகழ்த்தப்பட்டுள்ளது. அதில், திருநெல்வேலி மண்டலத்தில் மட்டும் 2015-16-ம் ஆண்டில் ரூ.29.74 கோடி அளவிற்கு விற்பனை நடைபெற்றுள்ளது.

கடந்த ஆண்டு தீபாவளி பண்டிகையின் போது திருநெல்வேலி மண்டலத்தில் ரூ.16.11 கோடி விற்பனை நடைபெற்றுள்ளது. 2016 தீபாவளி பண்டிகைக்கு ரூ.20.00 கோடி விற்பனைக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள 4 விற்பனை நிலையங்களில் கடந்த வருட தீபாவளி பண்டிகை காலத்தில் ரு. 6.10 கோடி அளவிற்கு விற்பனை நடைபெற்றது. இந்த வருட தீபாவளிக்கு ரூ. 7.58 கோடி விற்பனை குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதில் குமரி கோ-ஆப்டெக்ஸில் கடந்த தீபாவளிக்கு ரூ. 3.18 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த வருட தீபாவளிக்கு ரு.3.95 கோடி விற்பனை செய்ய குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தீபாவளி பண்டிகையினை முன்னிட்டு மங்கையர் விரும்பும் மென்பட்டுச் சேலைகள், சுபமுகூர்த்த திருமண பட்டு சேலைகள், ஆர்கானிக் பட்டு சேலைகள், எல்லோருக்கும் பட்டுச்சேலைகள் மற்றும் பருத்தி சேலைகள், ஜெயகார்த்திகா காட்டன் சேலைகள், படுக்கை விரிப்புகள், சுடிதார் இரகங்கள், ரெடிமேட் சட்டைகள், வேட்டிகள், கைலிகள் ஆகியவை நவீன டிசைன்களில் உற்பத்தி செய்யப்பட்டு கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடங்களை போலவே இந்த ஆண்டும் கோ-ஆப்டெக்ஸ் தங்க மலர்த்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்கள் தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகையின் போது, தாங்கள் வாங்கும் ஒவ்வொரு ரூ. 2,000/-க்கும் உள்ள ரொக்க விற்பனைக்கு ஒரு பரிசுக் கூப்பன் வழங்கப்படுகிறது.

முதல் பரிசாக 5 நபர்களுக்கு தலா 8 கிராம் தங்க நாணயமும், இரண்டாவது பரிசான 15 நபர்களுக்கு 4 கிராம் தங்க நாணங்களும் பரிசாக வழங்கப்படும். மேலும், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அரசு, தனியார்/அரசு சார்ந்த பள்ளிகள், கல்லூரிகள், போக்குவரத்து துறை மற்றும் கூட்டுறவு துறை பணியாளர்களுக்கு வட்டியில்லாத கடன் வசதிக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும், வாடிக்கையாளர்கள் பயன்பெறும் வகையில் புதிய கனவு நனவு சேமிப்பு திட்டமும் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தில் சேர்ந்து வாடிக்கையாளர்கள் 58% கூடுதல் பயனுடன் கைத்தறி துணிகள் வாங்கி பயனடையலாம்.

எனவே பொதுமக்கள் 30 சதவீதம் தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனையில் உள்ள பல்வேறு விதமான சுடிதார் இரகங்கள், பட்டு சேலைகள் ஆகியவற்றை பெற்று பயனடையுமாறு தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் நிர்வாககுழு உறுப்பினர் திரு. எம். மரியந்தோணி, கோ-ஆப்டெக்ஸ் மண்டல மேலாளர், திருநெல்வேலி (பொறுப்பு), திரு.க.இசக்கிமுத்து, குமரி கோ-ஆப்டெக்ஸ் மேலாளர் திரு. கே. மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.